RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1942

OPEN ACCESS

# சங்க இலக்கியங்கள் காட்டும் ஐவகை நிலங்களும் அறக்கோட்பாடுகளும்

**த. நர்மதா தேவி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, என்.ஜி. எம் கல்லூரி, பொள்ளாச்சி-642001, தமிழ்நாடு, இந்தியா

# The Five Types of Lands and Moral Principles shown in the Sangam Literature

**T. Narmatha Devi [a, *]**

[a] Department of Tamil, N.G.M. College, Pollachi-642001, Tamil Nadu, India

* Corresponding Author: narmathathangavel19@gmail.com

Received: 03-08-2022
Revised: 13-09-2022
Accepted: 05-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

It can be said that people adjust their lives according to the environment of the land in which they live. Thus, it is a natural phenomenon that has been going on since ancient times to the present day. Kurinji, Mullai, Marutham, Neithal, and Palai are the five kinds of land life that can be found in Sangam literature. This is a classic example of how people developed their professions according to their land type. In this way, the Kurinji land people depended on hunting, honey picking, millet sowing, preserving them, etc., in the hilly areas, the Mullai land shepherds were grazing goats and cattle, selling milk, curd, butter, etc., and the Marutham land peasants were also engaged in the cultivation of agriculture, the people of the land were engaged in fishing, selling them, drying and selling fish, producing salt, selling them, selling them, producing salt, and selling them according to the land. In this way, occupations form the basis of land-based life. Thus, the purpose of this study is to examine the ethical principles of the land-based life of the people.

**Keywords:** Morality, People, Culture, Hospitality, Professional, Five Type of Lands

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் ஐவகை நிலங்களைப் பற்றி பேசும் பாடல்களை கொண்டதாகும். அவை குறிஞ்சி, முல்லை ,மருதம்,நெய்தல், பாலை என்ற ஐவகை நிலங்கள் ஆகும். குறிஞ்சித் திணை பாடல்களில் மலை சார்ந்த மக்களின் வாழ்வியலையும், முல்லைத் திணை பாடல்களில் காடு சார்ந்த மக்களின் வாழ்வியலையும், மருதத் திணை பாடல்களில் வயல் சார்ந்த மக்களின் வாழ்வியலையும், நெய்தல் திணை சார்ந்த பாடல்களில் கடல் சார்ந்த மக்களின் வாழ்வியலையும், பாலைத்திணை பாடல்களில் குறிஞ்சியும் முல்லையும் பருவ கால மாற்றத்தால் திரிந்த நிலத்தின் இயல்பையும், மக்களின் வாழ்வியலையும் பேசுபவையாகும். ஒவ்வொரு திணைக்குமான மக்களின் உணவு, இருப்பிடம், தொழில் போன்ற வாழ்வியல் கூறுகள் வேறுபடுகின்றன. இவ்வாழ்வியல் கூறுகள் நிலத்தின் இயல்புக்கேற்ப அமைந்து விளங்கும் இயல்புடையனவாகும். அவ்வகையில் வாழ்வியலோடு தொடர்புடையக் கோட்பாட்டையும் இந்தத் திணை பாடல்களில் எவ்வாறு பதிவாக்கப்பட்டுள்ளனர் என்பதனையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## நிலக்கோட்பாடு

தமிழில் கிடைத்துள்ள மிகப் பழமையான தொல்காப்பியத்தில், தொல்காப்பியர் நிலக்கோட்பாட்டை

"மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய வைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்

சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

என நிலக் கோட்பாட்டை வகுத்து பின்னர் அந்நிலத்திற்குரிய முதன்மை தெய்வத்தையும் கூறியுள்ளார் (Ilampuranar, 2005). மேலும் நிலங்களுக்குரிய பொழுதுகளை கூறுகையில் பாலை நிலத்தை

"நடுநிலைத் திணையே"

"நடுநிலைத்திணை யாகிய பாலையாவது" (Ilampuranar, 2005)

மேலும் சிலப்பதிகாரத்தில்

"முல்லையும் குறிஞ்சியும் முறையிற் றிரிந்து

நல்லியல் பிழந்து நடுங்கு துயர் உறுத்துப்

பாலை என்பதோர் படிமம் கொள்ளும்"

குறிஞ்சியும் முல்லையும் பருவ கால மாற்றத்தால் அந்நிலங்களை பாலை என அழைக்கப்பட்டதை அறிய முடிகிறது (Puliyur Kesigan, 2015). மேலும் "பாலையை மட்டும் நில அடிப்படையிலான திணை என்பதனை விடக் கால அடிப்படையிலான திணை எனக் கூறலாம்" (Tamizhannal, 2014). மேலும் பழந்தமிழர்கள் நிலங்களின் தன்மைக்கு ஏற்ப தொழில்கள் செய்து வந்தனர் என்பதனை அறிய முடிகிறது. மேலும் திணைப் பண்பாடு குறித்து அ.கா பெருமாள் கூறுகையில்,

"திணைப் பண்பாடு என்பது ஒரு நிலத்தில் வாழும் மக்களின் பண்பாடு என்று குறிப்பிடலாம். இந்தப் பண்பாடு கிராமச் சார்புடையது. சங்ககாலத்தில் இருந்த மதுரை, புகார், வஞ்சி போன்ற நகரங்களின் பண்பாட்டுடன் திணைப் பண்பாடு பெரும்பாலும் பொருந்தி வராது" (Perumal, 2015).

## பண்பாடு குறித்த விளக்கம்

பண்பாடு என்பது மக்களின் வாழ்வியலோடு தொடர்புடைய ஒரு கூறு எனலாம். அதாவது மனிதனின் குணம்,நாகரிகம், பிற உயிரினங்களின் மேல் கொண்டிருக்கக் கூடிய இரக்க உணர்வு, பற்று, முதலிய பண்புகளை பண்பாடு எனலாம். அவ்வகையில் பண்பாடு குறித்து ஞா. தேவநேயப் பாவாணர் கூறுகையில்" பண் என்னும் பெயர்ச் சொல்லுக்கு மூலமான பண்ணுதல் என்னும் வினைச்சொல் சிறப்பாக ஆளப் பெறும்போது, பல்வேறு வினைகளைத் திருந்தச் செய்தலையும் பல்வேறு பொருள்களைச் செவ்வையாய் அமைத்தலையும் குறிக்கும்" (Devaneya Pavanar, 2015). மேலும் தா. ஈஸ்வரப் பிள்ளை கூறுகையில் "மக்களின் வரலாற்றில் அவர்கள் படைத்துக் கொண்ட கருவிகள் சமூகப் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், ஒழுக்கங்கள், கொள்கைகள் முதலியவற்றின் சாரம்சங்களைப் பண்பாடு எனப் பொதுவாக கூறலாம்" (Eswara Pillai, 2015). மேற்கண்ட வரையறை பார்க்கும்போது பண்பாடு என்பது ஓர் இனக்குழுவின் அகம் சார்ந்த தன்மைகளும் அதன் வெளிப்பாடான புறம் சார்ந்த செயல்பாடுகளும் உள்ளடக்கியது எனலாம்.

## பழந்தமிழர்களின் வாழ்வியல் பண்பாடு

தமிழர்கள் பொருள் ஈட்டி அறம் செய்து வாழ்ந்து வந்தனர். இல்வாழ்க்கையே அறவாழ்க்கையாகக் கொண்டனர். உலகமே பரிசாக கிடைத்தாலும் பழி தரும் செயல்களை செய்ய மறுத்தனர். சங்ககாலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர். எல்லா உயிரினங்களையும் தம்முயிர் போல் பாதுகாக்கக் கருதக்கூடியவர்கள் பழந்தமிழர்களே. அதே போல் எல்லா ஊர்களும், தம்முடைய ஊராகவும், எல்லா மக்களையும் உறவினர்களாக கருதுபவர்கள் தமிழர்கள் ஆவார். இதற்கு சான்றாக

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

மேற்கண்ட இக்கருத்தினை உலக மக்கள் யாவரும் கடைப்பிடித்து வாழ்ந்தால், உலகத்தை சீரழிக்கும் போர் வெறி, இனவெறி, சாதி வெறி, மதவெறி, போன்றவைகள் அடியோடு கலைந்து ஒற்றுமையுடன் வாழ முடியும் (Viswanathan, 2017).

## அறத்தில் வணிக நோக்கம் கொள்ளாமை

அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக் கூடாது என்பது சங்க கால மக்களின் கருத்தாக இருந்தது. மேலும் இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறு பிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்கு கூடாது என்பதனை

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்

அறவியலை வணிகன் ஆஅய் அல்லன்"

எனச் சங்ககால வள்ளல்களில் ஒருவரான ஆய் பற்றி ஏணிச்சேரி முடமோசியார் குறிப்பிட்டுள்ளார் (Viswanathan, 2017). நோக்கம் இன்றி அறம் செய்வதே மேன்மை தருவது என்பது இதில் உணர்த்தப்பட்டுள்ளது. மேலும் ஒரு மனிதனுடைய சிறந்த செல்வம் எது என்பதை பற்றி அமைந்த பாடல்,

"நெடிய மொழிதலும், கடிய ஊர்தலும்

செல்வம் அன்றுதம்செய் வினைப் பயனே

சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்

புன்கண் அஞ்சும் பண்பின்

மென்கண் செல்வம், செல்வம் என்பதுவே"

அதிகார தோரணையில் பேசுவதும், விரைந்து செல்லும் வாகனங்களிலே ஏறிச் செல்வது செல்வம் அன்று தான் செய்த செயலில் நல்ல பயனையே சான்றோர் செல்வம் என்று சாற்றுவர். தன்னைக் கண்டவர்களின் துன்பம், தன்னை கண்ட உடனே அஞ்சி ஓடும் படியான தன்மையுடன் அவர்களிடம் இரக்கம் காட்டுவதாகிய செல்வமே சிறந்த அழியாத செல்வமாகும் என மிளைகிளான் நல்வேட்டனார் கூறுகிறார் (Balasubramaniyan, 2014).

## அரசியல் அறம்

சங்கப் பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும் அரசர்களை முதன்மைபடுத்தியே கூறப்பட்டுள்ளன.

"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்

அறநெறிப் பிழையாத் திறனறி மன்னர்"

மேற்கண்ட புறநானூறு பாடலில் மதுரை மருதன் இள நாகனார் அரசன் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும் என்பது அறிவுரை கூறுகிறார். மேற்கண்ட சான்றுகளின் அடிப்படையில் நோக்கும் போது மன்னர்களுடைய செங்கோலும் வெண்கொற்றக் குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன என்பதனை அறிய முடிகிறது (Viswanathan, 2017).

## அறம் கூறும் அவையம்

அரசனின் அறநெறி ஆட்சிக்கு இன்றியமையாததாக அறம் கூறும் மன்றங்கள் விளங்கின. மேலும் அறம் கூறும் அவையம் பற்றி,

"அறம் அறக் கண்ட நெறிமான் அவையம்" (Viswanathan, 2004)

"அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி

செற்றமும் உவகையும் செய்யாது காத்து

ஞெமன் கோல் அன்ன செம்மைத்து ஆகி

சிறந்த கொள்கை அறம் கூறு அவையமும்"

மேற்கண்ட அடிகளால் அறிய முடிகிறது (Nagarajan, 2004).

## போர் அறம்

தமிழர்கள் போரிலும் அறநெறிகளை பின்பற்றி வாழ்ந்துள்ளனர். போர் அறம் என்பது வீரமற்றோர், புற முதுகிட்டோர், சிறார், முதலியோர் எதிர்த்து போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரை பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் தம்மை விட வலிமை குறைந்தவரோடு போர் செய்வது கூடாது என்பதை

"எறியார் எறிதல் யாவணது எறிந்தோர்

எதிர் சென்று எறிதலும் செல்லான்"

ஆவூர் முலங்கிழார் மேற்கண்ட அடிகளில் கூறியுள்ளார் (Viswanathan, 2017).

## குறிஞ்சி நிலத்தாரின் அறப்பண்பு

"கூடி வாழ்ந்தால் கோடி நன்மை"

என்ற முதுமொழிக்கு ஏற்ப பழந்தமிழர்கள் விளங்கியதை,

"கானவன்

வில்லின் தந்த வெண்கோட்டு ஏற்றை

புனை இருங்கதுப்பின் மனையோள் கொண்டி

குடிமுறை பகுக்கும் நெடுமலை நாட"

மேற்கண்ட அடிகளில் கானவன் வேட்டையாடிக் கொண்டு வந்த ஆண் பன்றியை தன் சுற்றத்தாருக்கு பகிர்ந்து கொடுத்ததை அறிய முடிகிறது (Balasubramaniyan, 2014). மேலும் ஔவையார்

"மருந்தே ஆயினும் விருந்தோடு உண்"

மேற்கண்ட சான்றுகளின் அடிப்படையில் நோக்கும் போது பழந்தமிழர்களின் ஒற்றுமையை அறிய முடிகிறது (Valarmathi, 1986). மேலும் விருந்தினர்களுக்கு உணவளித்து எஞ்சிய உணவை தலைவி தலைவனுக்கு வழங்க, அதனை மிக மன மகிழ்ச்சியோடு உண்டதை

"விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை

நின்னோடு உண்டலும் புரைவது என்று"

மேற்கண்ட அடிகளை நோக்கும் போது தலைவன் அறத்தை விரும்பும் நெஞ்சை உடையவன் என்பதனை அறிய முடிகிறது (Nagarajan, 2004). மேலும் தலைவனின் பண்பை கூறுகையில் மலை நீரினும் மென்மை தன்மை கொண்டவன் என்பதனை,

"மலை

நீரினும் சாயல் உடையவன்,நயந்தோர்க்குத்

தேர் ஈனும் வண்கையவன்"

மேற்கண்ட அடிகளில் வாயிலாக அறிய முடிகிறது (Viswanathan, 2017).

## குறமகளின் அறச்செயல்

குறமகள் ஒருத்தி தனது நாட்டில் பசியும் பிணியும் நீங்குக என வாழ்த்தியதை

"நளி மலைச் சிலம்பில் நல் நகர் வாழ்த்தி" (Nagarajan, 2004)

மேற்கண்ட கருத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில்

"பசியும் பிணியும் பகையும் நீங்கி

வசியும் வளனும் சுரக்க"

மேற்கண்ட சான்றுகளின் அடிப்படையில் பழந்தமிழர்கள் உலகத்தின் கொடிய நோயாகயிருக்கின்ற பசியும் பிணியும் நீங்குக என வாழ்த்தியதை அறிய முடிகிறது (Puliyur Kesigan, 2015).

## முல்லை நிலத்தாரின் விருந்தோம்பல் பண்பாடு

விருந்தோம்பல் என்பது தமிழர்களின் தலைசிறந்த பண்பாடாகும். தமிழ் இலக்கியங்கள் எல்லாவற்றிலும் தமிழர்களின் இச்சிறந்த பண்பைக் காணலாம். இல்லறத்திலே வாழ்வோர்க்குரிய கடமைகளில் 'விருந்துதோம்பல்' என்பதனைச் சிறந்த கடமையாக அறநூல்கள் கூறுகின்றனர். மேலும் அற நூல்களில் கூறியபடி பண்டையத் தமிழர்கள் வாழ்ந்ததை

"வேறுபுலம் படர்ந்த ஏறுடை யினத்த

வளை ஆன் தீம்பால் மிளைசூழ் கோவலர்

வளையோர் உவப்பத் தருவனர் சொரிதலின்

பலம்பெறு நசையொடு பதிவயின் தீர்ந்தரும்

புலம்புசேண் அகலப், புதுவிர் ஆகுவீர்"

வேறு இடத்திற்கு கொண்டு போய் ஆநிரைகளை மேய்த்து வந்த சங்கு போன்ற வெண்மையான பசுக்களின் பாலை ஆயர் மகளிர் தந்து உபசரிப்பர் .அப்பாலினை அருந்தி உங்கள் வழிநடை வருத்தம் தீர்ந்து புதிய பலத்தை பெருகுவீர்கள் என பாணன் மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்துகிறான் (Nagarajan, 2004). மேலும்

"கல்லென் கடத்திடைக், கடலின் இரைக்கும்

பல்யாட்டு இனநிரை, எல்லினர் புகினே

பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவிர்"

கல்லென்ற ஓசை நிறைந்த பாதையின் வழியில் சென்றால் அங்கே பல ஆடுகள் நிறைந்த மந்தையுள்ள இடத்தில் இரவில் நீங்கள் தங்கினால் அவர்கள் உங்களுக்கு பாலையும் (Nagarajan, 2004), பால் சோற்றையும் விருந்தாக அளிப்பார்கள் என்பதனை அறிய முடிகிறது. மேற்கண்ட கருத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில்

"பசுந்தினை முரல், பாலொடும் பெறுகுவிர்"

மேற்கண்ட அடிகளால் அறிய முடிகிறது. மேலும் வழிப்போக்கர்களுக்கு பசிப்பிணியைப் போக்குவதற்காக உணவினை மூங்கிற் குழாயில் அடைத்து வைத்து, வழிப்போக்கர்களுக்கு தேக்கிலையில் அவ்வுணவினை இட்டு விருந்து படைத்ததை (Nagarajan, 2004),

"வருவழி வம்பலர்ப் பேணி, கோவலர்

மழவிடைப் பூட்டிய குழாஅய்த் தீம்புளி

செவி அடை தீரத் தேக்கிலைப் பகுக்கும்"

மேற்கண்ட அடிகளால் இயற்கையில் கிடைக்கின்ற மூங்கிற் குழாய், தேக்கிலை முதலிய புழங்குப் பொருள்களை பயன்படுத்தி பழந்தமிழர்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்ததை அறிய முடிகிறது. மேலும் விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. விருந்தினர் என்றால் முன் பின் தெரியாத புதியவர்களுக்கு விருந்தினர் என்று பெயர். அவர்கள் எம்மொழியினராயினும் சரி, அவர்களை வரவேற்று உபசரிப்பது தமிழர்களின் தலைசிறந்த பண்பாடு என்பதனை மேற்கண்ட சான்றுகளின் அடிப்படையில் அறிய முடிகிறது (Jeyabal, 2017).

## இரக்க உணர்வு

பண்டையத் தமிழர்கள் எல்லா உயிர்களிடமும் இரக்கம் காட்டுவது தமிழர்களின் தலைசிறந்தப் பண்பாகும். அவ்வகையில் நெய்தல் திணைப் பாடலில் தேர்வாகனின் பிற உயிரினங்களின் மேல் கொண்டிருக்கக் கூடிய இரக்க உணர்வை வெளிப்படுத்தும் வகையில் அமைந்த பாடல்

"புணரி பொருத பூமணல் அடைகரை,

ஆழி மருங்கின் அலவன் ஓம்பி

வலவன் வள்வு ஆய்ந்து ஊர

நிலவு விரிந்தன்றால் கானலானே"

மேற்கண்ட அடிகளில் ஒரு தலைவன் தேரின் மேல் ஏறிக்கொண்டு வருகிறான். அத்தேர் கடற்கரையின் வழியே வந்து கொண்டிருக்கின்றது. கடற்கரையிலே நண்டுகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன. தேரோட்டி வரும் பாகன், தேர்ச் சக்கரத்திலே அந்த நண்டுகள் அகப்பட்டு நசுங்காதபடி கவனத்துடன் தேரை ஓட்டிக்கொண்டு வருகின்றான். இச்சமயத்திலேயே அவனுடைய செய்கைக்கு உதவியாக நிலவும் தோன்றியது. தமிழர்கள் பிற உயிரினங்களின் மேல் கொண்டிருக்கக் கூடிய இரக்க உணர்வை வெளிப்படுத்துகின்றது (Balasubramaniyan, 2014).

## பாலை நிலத்தாரின் அறக்கோட்பாடு

தலைவன் தன் சுற்றத்தாருக்கு நேர்கின்ற துன்பத்தினை போக்கி அவர்களை பேணிக் காக்க வேண்டும் என்றும் தன் இனத்தார் வரியாக உண்ணுதல் பொருட்டும் புதியவர்களை தம்மோடு உறவினர்களாக வேண்டும் என்பதற்காக பொருள் பெற்றதன் நோக்கத்தை தலைவன் கூறியதை,

"கேள் கேடு ஊன்றவும் கிளைஞர் ஆரவும்

கேள் அல் கேளிர் கெழீஇயினர் ஒழுகவும்

ஆள்வினைக்கு எதிரிய ஊக்கமொடு புகழ் சிறந்து"

மேற்கண்ட அடிகளால் தமக்காக இன்றி பிறருக்காகவே வாழும் தலைவனின் சிறந்த அறப்பண்பை அறிய முடிகிறது (Jeyabal, 2017).மேற்கண்ட பாடலுக்கு வலுச் சேர்க்கும் வகையில்

"இவளினும் சிறந்தன்று ஈதல் நமக்கு"

மேற்கண்ட அடிகளில் வறிய நிலையில் இருப்பவர்களுக்கு உதவிய நிலையினை அறிய முடிகிறது (Jeyabal, 2017). மேலும்

"செழு நகர் நல்விருந்து அயர்மார் ஏமுற

விழு நிதி எளிதினின் எய்துக"

மேற்கண்ட அடிகளிலும் தலைவன் பொருள் ஈட்டுவதன் நோக்கம் விருந்தினருக்கு உபசரிப்பதற்கு என்பதனை அறிய முடிகிறது. மேற்கண்ட சான்றுகளை ஆராயும்போது இல்லறம் என்பது கணவனும் மனைவியும் இணைந்து அற வாழ்வில் ஈடுபடுவதே சிறந்த இல்வாழ்வு பண்பாகும் என்பதனை அறிய முடிகிறது (Jeyabal, 2017).

## முடிவுரை

தொல்காப்பிய சான்றுகளின் அடிப்படையில் நிலப்பாங்கை ஆராய்ந்து, பின்னர் பாலை நிலத் தோற்றத்திற்கு,காரணத்தையும் ஆராய்ந்து, பின்னர் பண்பாடு குறித்த விளக்கங்களை அறிஞர்களின் சான்றுகளோடு ஆராய்ந்து, சங்க இலக்கிய நூல்களின் வாயிலாக தமிழர்களின் வாழ்வியலை ஆராய்ந்து, பின்னர் அறத்தின் வணிக நோக்கம் கொள்ளாமை குறித்தும், சங்ககால அரசாட்சி முறையில் செங்கோலும், வெண்கொற்றக் குடையும் அறத்தின் குறியீடுகளாக இருந்ததை அறிய முடிகிறது. மேலும் அரசின் நல்லாட்சிக்கு அறம் கூறும் அவையம் பெரிதும் துணை புரிந்ததை அறிய முடிகிறது. அறநெறியில் போர் நடைபெற்றதையும் அறிய முடிகிறது. இல்வாழ்க்கையின் பயனே விருந்தோம்பல் என்பதனை பழந்தமிழர்கள் கருதியதையும், பிற உயிரினங்களின் மேல் உள்ள இரக்க உணர்வையும்,இவ்வாறாக ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய அறக்கோட்பாடுகளை ஆராயப்பட்டுள்ளது.

## References

Balasubramaniyan, K.V. (2014) Nattrinai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

Devaneya Pavanar, (2017) Pandai Tamil Nagarikamum Panpaadum, Gowra Pathippaga Kuzhumam, Chennai, India.

Eswara Pillai, T. (2000) Bhakthi Ilakkiyathil Samuthaiya Paarvai, Tamil University, Tamil University, Chennai, India.

Ilampuranar, (2005) Tholkappiyam- Ilampuranar Urai, First Edition, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Jeyabal, R. (2017) Agananooru (Mulamun Uraium), New Century Book House, Chennai, India.

Nagarajan, V. (2004) Kurunthogai moolamum uraiyum, New Century Book House, Chennai, India.

Perumal A. K. (2015) Tamilaga Panpadu, Araiychi Niruvanam, Chennai, India.

Puliyur Kesigan, (2015) Silapathikaram, Saradha Pathippagam, Chennai, India.

Puliyur Kesigan, (2018) Manimegalai, Saradha Pathippagam, Chennai, India.

Tamizhannal, (2014) Sanga Ilakkiya Oppidu Ilakkiya Kolkaikal, Meenashi Puthaga Nilaiyam, Madurai, India.

Valarmathi, (1986) Kondrai Venthan, Mathi Nilaiyam, Chennai, India.

Viswanathan, A. (2004) Kalithogai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

Viswanathan, A. (2017) Purananuru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License